**ஆகஸ்ட் – 20**

# TNPSC துளிகள்

- இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு கடற்படைப் பயிற்சியான SLINEX-25 என்பது இலங்கையின் கொழும்பு நகரில் நடைபெற்றதோடு இதில் கடல்சார் ஒத்துழைப்பு மற்றும் இயங்குதன்மையை மேம்படுத்துவதற்காக INS ராணா மற்றும் INS ஜோதி ஆகிய கப்பல்கள் பங்கேற்றன.
- முந்தைய ஆண்டில் 1.27 லட்சம் கோடி ரூபாயாக இருந்த இந்தியாவின் பாதுகாப்பு உற்பத்தியானது 18% வளர்ச்சியடைந்து 2024-25 ஆம் நிதியாண்டில் சாதனை அளவாக 1.51 லட்சம் கோடி ரூபாயை எட்டியது.
- பெருந்தொற்று காலத்தில் வாங்கப்பட்ட கடன் காரணமாக அமெரிக்க தேசியக் கடன் 2030 ஆம் ஆண்டிற்கான கணிப்புகளை விட 37 டிரில்லியன் டாலர் மதிப்பினை எட்டியது.
- ரியல் மாட்ரிட் கால்பந்து அணிக் குழுவின் நிறுவன மதிப்பு 14% உயர்ந்து 1.9 பில்லியன் யூரோவாகவும், பார்சிலோனா அணிக் குழுவின் நிறுவன மதிப்பு 11% அதிகரித்து 1.7 பில்லியன் யூரோவாகவும் உள்ளது.
    - இரண்டு அணிக் குழுக்களும் AAA+ நிறுவன வலிமை மதிப்பீடுகளைப் பெற்றன மற்றும் முறையே 6 பில்லியன் யூரோ மற்றும் 4.4 பில்லியன் யூரோ என்ற உயர்ந்த நிறுவன மதிப்புகளைக் கொண்டுள்ளன.
- 2030 ஆம் ஆண்டு காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான இந்தியாவின் முன்னெடுப்பினை இந்திய ஒலிம்பிக் சங்கம் (IOA) அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தது.
    - புது டெல்லி அரசானது, இதற்கு முன்னதாக இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்தியதன் 20 ஆம் ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில், ஆகஸ்ட் 31 ஆம் தேதியன்றான காலக்கெடுவிற்கு முன்னதாக இந்தியாவானது தனது இறுதி முன் மொழிவைச் சமர்ப்பிக்க உள்ளது.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## 2026 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் சிறு கடன் GLP

- தமிழ்நாட்டின் சிறு நிதி துறையில் மொத்த நிலுவைக் கடன் (GLP - gross loan portfolio) 2025 ஆம் ஆண்டு ஜூன் மாத இறுதியில் 23.5% குறைந்து 43,700 கோடி ரூபாயாக இருந்தது.
- கடந்த ஆண்டு இதே காலக் கட்டத்தில் இது 57,100 கோடி ரூபாயாக இருந்தது.
- காலாண்டு அடிப்படையில் (QoQ), 2025 ஆம் ஆண்டு மார்ச் 30 ஆம் தேதி நிலவரப்படி GLP 46,800 கோடி ரூபாய் மதிப்பிலிருந்து 6.7% குறைந்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டு தமிழ்நாடு பணக் கடன் வழங்கும் நிறுவனங்கள் (கட்டாய நடவடிக்கைகளைத் தடுக்கும்) சட்டம் ஆனது ஜூன் மாதத்தில் அறிவிக்கப்பட்டது.
- கடன் வாங்குபவர்களுக்கு எதிரான கட்டாய நடவடிக்கை தொடர்பான இச்சட்டத்தின் விதிகள் இந்திய ரிசர்வ் வங்கியில் பதிவு செய்யப்பட்ட வங்கி சாரா நிதி நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு வங்கிகள் மற்றும் சங்கங்களுக்கும் பொருந்தும்.
- முத்தூட் மைக்ரோஃபின் நிறுவனமானது, தமிழ்நாட்டில் 3,200 கோடி ரூபாய் மதிப்பிலான சிறு நிதி நிலுவைக் கடனைக் கொண்டுள்ளது.
- மேற்கு வங்காளம் தவிர அனைத்து மாநிலங்களும் 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில்

இரட்டை இலக்க மொத்த உள்நாட்டு உற்பத்தி வீழ்ச்சியை எதிர் கொண்டன.

❖ ஒடிசா 24.7% ஆகவும், அதைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் கர்நாடகா ஆகியவை முறையே 22.9% ஆகவும் அதிகளவிலான சரிவை எதிர் கொண்டன.

**GROSS LOAN PORTFOLIO DROPS**

| | March 2024 | March 2025 |
|---|---|---|
| Gross loan portfolio (Rs cr) | 4,42,700 | 3,81,200 |
| Active loans (crore) | 16.1 | 14 |
| Loan offtake last 3 months (Rs cr) | 1,15,600 | 71,580 |
| No of loans in last 3 months (Lakh) | 240.5 | 133 |
| PAR 1-30 | 0.7% | 1.4% |
| PAR 31-180 | 2.1% | 6.2% |
| PAR 180 plus | 1.6% | 5.1% |

*PAR is portfolio at risk; Source: CRIF High Mark*

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் ஆழ்கடல் ஆய்வுத் திட்டம்




❖ இந்தியா தேசிய ஆழ்கடல் ஆய்வுத் திட்டத்தினைத் தொடங்க உள்ளது.

❖ கடலில் எண்ணெய் மற்றும் எரிவாயு இருப்புக்களை ஆராய்வதை இந்தத் திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

- பிரதமர் மோடி சுதந்திர தினத்தன்று இத்திட்டம் குறித்து அறிவித்து "சமுத்திர மாந்தன்" என்று அழைத்தார்.
- இது ஆற்றலில் தன்னிறைவை அதிகரிப்பதற்காக வரையறுக்கப்பட்ட கால அவகாச அடிப்படையில் இயங்கும்.
- இந்த ஆய்வுத் திட்டமானது அறிவியல் ஆராய்ச்சி, கடல்சார் கல்வியறிவு மற்றும் கடலடி பொறியியலை ஊக்குவிக்கும்.

## SabhaSaar கருவி


- கிராம சபைக் கூட்டங்களின் கட்டமைக்கப்பட்ட செயல்பாடுகளை உருவாக்கச் செய்வதற்கான ஒரு செயற்கை நுண்ணறிவு கருவியான 'SabhaSaar' மத்திய அரசினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- சுதந்திர தினத்தன்று திரிபுராவில் அறிமுகப்படுத்தப்பட்ட இது பிற மாநிலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட உள்ளது.
- 'SabhaSaar' கிராம சபை ஒளிப்படக் காட்சிகள் மற்றும் ஒலிப் பதிவுகளை பல இந்திய மொழிகளில் மொழிப்பெயர்த்து சுருக்கமாக வழங்குகிறது.
- இந்த முன்னெடுப்பானது இந்தியா முழுவதும் 2.55 லட்சத்திற்கும் மேற்பட்ட கிராமப் பஞ்சாயத்துகளில் நிறுவப்பட்டு, நிர்வாகத்தையும் பொது மக்களின் பங்கேற்பையும் மேம்படுத்துகிறது.




## 100 GW சூரிய PV தொகுதி

- அங்கீகரிக்கப்பட்ட மாதிரிகள் மற்றும் உற்பத்தியாளர்களின் (ALMM) பட்டியலின் கீழ் இந்தியா 100 GW அளவிலான சூரிய ஒளி மின்னழுத்தத் (PV) தொகுதி சார்ந்த மின் உற்பத்தித் திறனை எட்டியது.
- இது 2014 ஆம் ஆண்டில் வெறும் 2.3 GW ஆக இருந்த அளவிலிருந்து ஏற்பட்டுள்ள உயர்வைக் குறிக்கிறதோடு இது உள்நாட்டுச் சூரிய சக்தி உற்பத்தியில் விரைவான வளர்ச்சியைப் பிரதிபலிக்கிறது.
- ALMM பட்டியல் ஆனது 2019 ஆம் ஆண்டில் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகத்தினால் (MNRE) வெளியிடப் பட்டதோடு 2021 ஆம் ஆண்டில் வெளியிடப் பட்ட இதன் முதல் பட்டியல் 8.2 GW திறனைக் குறிப்பிட்டது.
- இந்த முன்னேற்றம் உயர் திறன் கொண்ட சூரிய மின் உற்பத்தி தொகுதிகளுக்கான உற்பத்தி ஊக்குவிப்புத் திட்டம் (PLI) மற்றும் ஆத்மநிர்பார் பாரத் இலக்குகள் போன்ற திட்டங்களால் முன்னேற்றப்படுகிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் இந்தியா தனது 500 GW அளவிலான புதைபடிவம் சாரா எரி

பொருள் சார்ந்த உற்பத்தி திறன் இலக்கை அடையும் பாதையில் உள்ளது.




## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்


### மக்கும் வகையிலான படுக்கைத் துணி உறைகள்




- வடகிழக்கு எல்லைப்புற இரயில்வே (NFR) நிர்வாகமானது அதன் இரயில்களில் மக்கும் வகையிலான உயிரி நெகிழிப் பைகளைப் பயன்படுத்தும் இந்தியாவின் முதல் இரயில்வே மண்டலமாக மாறியது.
- இந்த முன்னெடுப்பானது 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15 ஆம் தேதியன்று மக்கும் வகையிலான பைகளில் படுக்கைத் துணி விநியோகத்துடன் தொடங்கியது.
- ISO17088 தரத்திற்கு இணக்கமான உயிரி நெகிழி ஆனது கௌஹாத்தியின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தினால் (IIT-G) உருவாக்கப்பட்டது.
- இந்தச் சோதனைத் திட்டம் ஆனது 25 இரயில்களில் அறிமுகப்படுத்தப்பட்டு, அசாம், பீகார், வங்காளம், திரிபுரா மற்றும் அருணாச்சலப் பிரதேசம் முழுவதும் 40,000 பைகள் விநியோகிக்கப்பட்டன.

## புதிய மீவொளிர் விண்முகில் 2025


- வானியலாளர்கள் ஒரு கருந்துளையானது ஒரு பெரிய நட்சத்திரத்துடன் தொடர்பு கொள்வதால் ஏற்பட்டதாக கருதப்படுகின்ற, ஒரு புதிய வகையான மீவொளிர் விண் முகிலைக் கண்டறிந்துள்ளனர்.
- இது சுமார் 700 மில்லியன் ஒளி ஆண்டுகள் தொலைவில் உள்ளது.
- சூரியனின் நிறையில் சுமார் 10 மடங்கு அதிகமாக இருக்கும் நட்சத்திரமும் கருந்துளையும் அவற்றின் வெடிப்புக்கு முன்னதாக ஓர் இரட்டை அமைப்பை உருவாக்கியது.
- பல ஆண்டு காலச் சுழல் காலத்தில் அந்த கருந்துளையானது நட்சத்திரத்திலிருந்து பொருட்களை உள்ளிழுத்து, அதன் வடிவத்தை சிதைத்து, அதன் வெடிப்பினைத் தூண்டியது.
- இந்த நிகழ்வானது, சூரியன் அதன் முழு வாழ்நாளிலும் வெளியிடும் ஆற்றலை விட ஒரு நொடியில் அதிக ஆற்றலை வெளியிட்டது என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.




## PelV-1 - பெரிய வைரஸ்

- ஹவாய் அருகே இதுவரை அறியப்பட்டவற்றிலேயே மிக நீளமான வால் கொண்ட ஒரு பெரிய வைரஸை அறிவியலாளர்கள் கண்டறிந்துள்ளனர்.
- PelV-1 என பெயரிடப்பட்ட இந்த வைரஸ், வடக்கு பசிபிக் பகுதியில் உள்ள ALOHA நிலையத்தில் கண்டறியப்பட்டது.
- PelV-1 ஓர் அரிய வைரஸ் ஒம்புயிரிக் குழுவான டைனோஃப்ளாஜெல்லேட்டுகளைப் பாதிக்கிறது.
- 2.3 மைக்ரான் வரை நீளுகின்ற இதன் வால் பல பாக்டீரியாக்களை விட நீளமானதாகும்.
- இந்த வால் 30 நானோமீட்டர் அகலமுடையது, மேலும் கேப்சிட்டை (புரத உறை) விட 10 மடங்கு நீளமானது.
- படி எடுத்தலின் போது அல்லாமல், ஒம்புயிரி செல்களின் நகல் வெளியீட்டிற்குப் பிறகு தான் PelV-1 வைரசின் வால் உருவாகிறது.
- இது மெசோமிமிவிரிடே குடும்பத்தைச் சேர்ந்தது.
- PelV-1 வைரசின் மரபணுவில் 459,000 அடிப்படை இணைகள் மற்றும் 467 மரபணுக்கள் உள்ளன.

- ரோடாப்சினைக் கொண்டுள்ளதால், இது சூரிய ஒளியை ஆற்றலுக்காகப் பயன்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.




## இந்தியாவின் EO செயற்கைக்கோள் திரள்





- இந்தியாவின் முதல் வணிக ரீதியான புவிக் கண்காணிப்பு (EO) செயற்கைக்கோள் திரளை உருவாக்குவதற்காக PixxelSpace india நிறுவனம் தலைமையிலான ஒரு கூட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
- இந்தத் தனியார் கூட்டமைப்பு ஆனது அடுத்த ஐந்து ஆண்டுகளில் 12 மேம்பட்ட EO செயற்கைக் கோள்களை விண்ணில் ஏவுவதற்காக 1,200 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்ய உள்ளது.
- இந்த செயற்கைக்கோள் திரள் ஆனது, பருவநிலைக் கண்காணிப்பு, பேரிடர் மேலாண்மை, வேளாண்மை, பாதுகாப்பு மற்றும் நகர்ப்புறத் திட்டமிடல் ஆகியவற்றை ஆதரிக்கும்.
- இந்த முன்னெடுப்பானது, இந்தியா வெளிநாட்டுத் தரவுகளைச் சார்ந்திருப்பதைக் குறைத்து, பொது-தனியார் கூட்டாண்மையின் (PPP) கீழ் உள்நாட்டு விண்வெளித் துறையை மேம்படுத்தும்.

## இஸ்ரோவின் விண்வெளி ஆய்வகம்




- அருணாச்சலப் பிரதேசத்தின் மெச்சுகாவில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் இஸ்ரோ மற்றும் முஸ்கான் அறக்கட்டளை ஆகியவை இணைந்து ஒரு விண்வெளி ஆய்வகத்தைத் தொடங்கியுள்ளன.
- கல்வி அமைச்சர் பசாங் டோர்ஜி சோனாவின் மறைந்த தந்தையை கௌரவிக்கும் வகையில் இந்த ஆய்வகத்திற்குப் பசாங் வாங்சுக் சோனா இஸ்ரோ விண்வெளி ஆய்வகம் என்று பெயரிடப்பட்டுள்ளது.
- தொலைதூர ஷி-யோமி மாவட்டத்தில் உள்ள மாணாக்கர்களுக்கு விண்வெளி அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் நேரடிப் பயிற்சி அளிப்பதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த ஆய்வகமானது, செயற்கைக்கோள் அமைப்புகள், ஏவு கல அறிவியல் மற்றும் விண்வெளி சார் புதுமைகளை ஆராய்வதற்கான செயற்கருவிகளை வழங்குகிறது.
- இந்த முன்னெடுப்பானது, 2024 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் யசாலியில் அமைக்கப் பட்ட அருணாச்சலப் பிரதேசத்தின் முதல் விண்வெளி ஆய்வகத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## மூலக்கூறு 3b





- ரூர்கேயின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் மருந்து

எதிர்ப்புத் திறன் கொண்ட பாக்டீரியாவை எதிர்த்துப் போராடுவதற்காக 3b எனும் மூலக் கூறினைக் கண்டுபிடித்துள்ளனர்.

- மூலக்கூறு 3b, KPC-2 க்ளெப்சில்லா நிமோனியா தொற்றுகளுக்குச் சிகிச்சையளிக்க மெரோபெனெமுடன் இணைந்து செயல்படுகிறது.
- இது β-லாக்டேமஸ் தடுப்பானாகச் செயல்பட்டு, நுண்ணுயிர் எதிர்ப்பிகளைச் சிதைக்கும் நொதிகளைத் தடுக்கிறது.
- KPC-2 என்பது உலக சுகாதார அமைப்பின் முதன்மையான சுகாதார அச்சுறுத்தல்களில் பட்டியலிடப்பட்டுள்ள ஒரு மீயுயரி ஆகும்.
- இந்தக் கண்டுபிடிப்பு ஆனது அதிகரித்து வரும் உலகளாவிய அச்சுறுத்தலான நுண்ணுயிர் கொல்லி எதிர்ப்புத் திறனை (AMR) தடுப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் கேட்டோகலினா





- மேற்குத் தொடர்ச்சி மலைகளில் முதன்முறையாக ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் பேரினத்தைச் சேர்ந்த ஓர் அரிய இரவு நேரங்களில் வாழும் அந்துப்பூச்சி பதிவு செய்யப் பட்டது.
- கேரளாவின் பாலக்காடு மாவட்டத்தில் உள்ள சூலன்னூர் மயில் சரணாலயத்தில் இந்த கண்டுபிடிப்பு பதிவானது.
- ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் கேட்டோகலினா என அடையாளம் காணப்பட்ட இந்த அந்துப் பூச்சி ஆனது, முன்னர் வடகிழக்கு இந்தியாவில் மட்டுமே அறியப்பட்ட இனமாகும்.
- ஆராய்ச்சியாளர்கள் இதனை ஆன்டிட்ரிசுலோயிட்ஸ் கேட்டோகலினா சைக்ளிகா என்ற துணை இனமாக உறுதிப்படுத்தினர்.
- அந்துப்பூச்சியானது, உலகளவில் அறியப்பட்ட இரண்டு இனங்கள் மட்டுமே காணப் படுகின்ற நோக்டுயிடே குடும்பத்தைச் சேர்ந்தது.

## அணு மின் நிலையங்களின் செயல்பாட்டினை பாதிக்கும் ஜெல்லிமீன்கள்

- ஜெல்லிமீன்களின் கூட்டங்கள் குளிரூட்டலுக்கான நீர் விநியோகக் குழாய்களை அடைத்துள்ளதால் பிரான்சின் முக்கிய அணு மின் நிலையங்களில் ஒன்று

தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது.


- இந்த உலைகள் ஆனது, அவற்றின் உலைகளையும், விசையாழிகளையும் குளிர்விக்க கடல் நீரின் தொடர்ச்சியான ஓட்டத்தைச் சார்ந்துள்ளன.
- ஜெல்லிமீன்களின் கூட்டம் அதிக எண்ணிக்கையில் கொத்தாகக் குவிவதால் இந்தக் குழாய்களில் நீர் ஓட்டங்கள் விரைவாக தடைபடுகின்றன.
- இறந்த ஜெல்லிமீன்கள் பல உறைகள் வழியாகச் சென்று உள் அமைப்புகளை சேதப்படுத்தும் கூழ்மம்/ஜெல் போன்ற பொருளாக மாறும்.
- நீர் வழங்கீட்டுக் குழாய்களில் இருந்து ஜெல்லிமீன்களை நீக்குவது இரண்டு நாட்கள் வரை எடுக்கக்கூடிய ஒரு கடினமான மற்றும் ஆபத்தான செயல்முறையாகும்.
- 1990 ஆம் ஆண்டுகளில் இருந்து, ஜெல்லிமீன்கள் உலகளவில் உள்ள அணுமின் நிலையங்களின் செயல்பாட்டினைப் பாதித்துள்ளன.
- பருவநிலை மாற்றம் கடல் நீரை வெப்பமாக்கி, ஜெல்லிமீன்களின் இனப் பெருக்கத்தினைத் துரிதப்படுத்தியதோடு, அவற்றின் உணவு விநியோகத்தையும் அதிகரித்துள்ளது.
- அதிகப்படியான மீன்பிடித்தல் மற்றும் நெகிழி மாசுபாடு அதன் உயர் மட்ட வேட்டையாடும் இனங்களை அகற்றி, கடற்கரைகளுக்கு அருகில் அவற்றிக்கான இனப்பெருக்க இடங்களை வழங்குவதன் மூலம் ஜெல்லிமீன்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்துள்ளது, இது ஆலைகளின் மின் விநியோக நிறுத்தம் மற்றும் மின் தடைகளின் அபாயத்தை அதிகரித்துள்ளது.




## மக்கும் வகையிலான பொதிகட்டும் பொருள்

- சென்னையின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் வேளாண் கழிவுகள் மற்றும் பூஞ்சைகளிலிருந்து சுற்றுச்சூழலுக்கு உகந்த பொதி கட்டும் பொருளை உருவாக்கி வருகின்றனர்.
- அவர்கள் வேளாண்மை மற்றும் காகிதக் கழிவுகளைப் பயன்படுத்தி மக்கும் வகையிலான பொதி கட்டும் பொருளை உருவாக்கினர்.
- கனோடெர்மா லூசிடம் மற்றும் ப்ளூரோடஸ் ஆஸ்ட்ரேட்டஸ் போன்ற பூஞ்சைத் திரிபுகள் ஆனது கழிவுசார் மூலக்கூறுகளில் வளர்க்கப்பட்டன.
- இது அட்டைப் பெட்டியில் வளர்க்கப்படும் கனோடெர்மா EPS (விரிவாக்கப்பட்ட பாலிஸ்டைரீன்) கூறினை விட அதிக அழுத்தம் கொண்ட வலிமையைக் காட்டியது.

- இந்தியா ஆண்டுதோறும் 350 மில்லியன் டன்களுக்கு மேலான வேளாண் கழிவுகளை உற்பத்தி செய்கிறது, அவற்றில் பெரும்பாலானவை பயன்படுத்தப்படாமல் உள்ளன.
- இந்தப் பொதி கட்டும் பொருள் ஆனது வழக்கமான தாள்களுக்குப் பதிலாக நெகிழி இல்லாத, சுற்றுச்சூழலுக்கு உகந்த மாற்றாக அமையும்.




# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் 500 முன்னணி நிறுவனங்களின் பட்டியல்




- டாப் பிராண்ட் யூனியன் நிறுவனமானது டாப் பிராண்ட் 2025 ஆம் ஆண்டிற்கான "உலகின் 500 முன்னணி நிறுவனங்களின் பட்டியலை" வெளியிட்டது.
- மைக்ரோசாப்ட் நிறுவனம் 1,062.505 பில்லியன் அமெரிக்க டாலர் பிராண்ட் மதிப்புடன் முன்னணியில் உள்ளது.
- NVIDIA 1,046.760 பில்லியன் அமெரிக்க டாலர் பிராண்ட் மதிப்புடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ஆப்பிள் நிறுவனம் 997.685 பில்லியன் அமெரிக்க டாலர்களுடன் அடுத்த இடத்தில் உள்ளது.

- அமேசான், ஆல்பாபெட் (கூகிள்), சவுதி அரம்கோ, வால்மார்ட், மெட்டா (ஃபேஸ்புக்), பெர்க்ஷயர் ஹாத்வே மற்றும் பிராட்காம் ஆகியவை பிற முன்னணி நிறுவனங்களில் அடங்கும்.
- பெட்ரோசீனா அதிக மதிப்பினைக் கொண்ட 14வது இடத்தில் உள்ள சீன நிறுவனம் ஆகும்.

# மாநிலச் செய்திகள்

## போதைப்பொருள் எதிர்ப்பு முன்னெடுப்புகள் - பஞ்சாப்



- பஞ்சாப் மாநில அரசானது, யுத் நஷேயன் விருத் (போதைப் பொருட்களுக்கு எதிரான போர்) நடவடிக்கையில் காவல்துறை முயற்சிகளை ஆதரிக்கும் வகையில் முதல் முறையாக வெகுமதி வழங்கீட்டுக் கொள்கையை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஒரு கிலோவுக்கு மேல் ஹெராயின்களை கையகப்படுத்தும் காவல்துறை அதிகாரிகளுக்கு அவர்களின் சிறப்பான செயல்திறனுக்காக 1.20 லட்சம் ரூபாய் வெகுமதி வழங்கப்படும்.
- இதன்பாடு பள்ளிகளில் போதைப்பொருள் எதிர்ப்பு பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டது என்பதோடு மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக 20 லட்சம் பேர் மாபெரும் PTM நிகழ்வுகளில் பங்கேற்றனர்.
- பஞ்சாப் எல்லை தாண்டிய போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க பாகிஸ்தானுடனான அதன் 553 கிமீ எல்லையில் ஆளில்லா வாகன எதிர்ப்பு அமைப்பை நிலை நிறுத்தியது.

## முதலமைச்சர் கிசான் கல்யாண் யோஜனா - மத்தியப் பிரதேசம்


- மத்தியப் பிரதேச ஆளுநர் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள், முதல்வர் கிசான் கல்யாண் யோஜனா திட்டத்தின் கீழ் 83 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் 17,500 கோடி ரூபாய் நிதியைப் பெற்றுள்ளதாக அறிவித்தார்.
- இந்தத் திட்டம் ஆனது சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ஆண்டுதோறும் 6,000 ரூபாய் வழங்குவதற்காக 2020 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் தொடங்கப்பட்டது.
- மத்திய அரசின் பிரதமர் கிசான் சம்மன் நிதி (PM-KISAN) திட்டத்தின் கீழ் பெறப்பட்ட 6,000 ரூபாயுடன் கூடுதலாக இந்த நிதி உதவியும் வழங்கப்பட்டது.
- நிதி உதவி ஆனது தலா 2,000 ரூபாய் என்ற அளவில் மூன்று சம தவணைகளில் நேரடிப் பலன் பரிமாற்றம் (DBT) மூலம் வழங்கப்பட்டது.

- ❖ வருமான வரி செலுத்திய, அரசு வேலைகளை வகித்த அல்லது தேர்ந்தெடுக்கப்பட்டப் பிரதிநிதிகளாக இருந்த விவசாயிகள் இந்தத் திட்டத்தின் பலனைப் பெறுவதிலிருந்து விலக்கப்பட்டனர்.




# இதரச் செய்திகள்

## பண்டைய காலச் சேற்று அலைகள்




- ❖ 117 மில்லியன் ஆண்டுகள் பழமையான சேற்று அலைகள் கினியா-பிசாவின் மேற்கே அட்லாண்டிக் பெருங்கடலின் அடிப்பகுதியில் காணப்பட்டன.
- ❖ ஆரம்பகால அட்லாண்டிக் நீர் ஓட்டங்களிலிருந்து கடலுக்கு அடியில் ஏற்பட்ட பனிச் சரிவுகளால் அவை உருவாகின.
- ❖ இந்த நிகழ்வானது, ஆழ்கடல் கார்பன் அடுக்குகளைச் சீர்குலைத்து, உலகளாவியப் பருவநிலை அமைப்புகளைப் பாதித்தது.
- ❖ கண்டத் தட்டுகள், பெருங்கடல் நீரோட்டங்கள் மற்றும் கிரெட்டேசியஸ் வெப்ப மயமாதல் பற்றிய நமது புரிதலை இது மறுவடிவமைப்பதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர்.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★